**NILIS**

# தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவனம்

## கொழும்புப் பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவி

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவனத்தின் (National Institute of library and information science - NILIS) பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் / முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் / பெயரிடப்படும் நபர் இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் 63 வயதிற்குக் குறைவானவராக இருக்க வேண்டும். சித்திகரமான விண்ணப்பதாரர் / பெயரிடப்படும் நபர் நியமனம் பெறும் நாள் முதல் மூன்று வருட காலத்திற்கு அல்லது அவர் / அவளது 65 வயது பூர்த்தியாகும் வரை அல்லது இவ்விரண்டில் எது முன்வருகிறதோ அதுவரை அவரது பதவிக் காலம் அமுலில் இருக்கும்.

NILIS என்பது கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவனம் என்பதோடு அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டப் பின் படிப்பு கற்கைகள் நடத்தப்படும் நிறுவனம் ஒன்றாகும். NILIS மாணவர்களில் பிரதானமாக தற்போது அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் உள்ளனர். அது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவையிலும் ஈடுபட்டுள்ளது.

பணிப்பாளர் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று மற்றும் கல்விசார் அதிகாரியாவார். அவர் நிறுவனத்தின் பிரதான கணக்கு அதிகாரி என்பதோடு, நிறுவனத்தின் நிர்வாக சபை மற்றும் கல்விசார் குழுவின் அங்கத்தவராவார். முகாமைத்துவ கொள்கை தயாரிப்பு மற்றும் செயற்படுத்தல் மற்றும் நிர்வாக சபையின் முடிவுகளை செயற்படுத்துவதற்கான கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதன் பொறுப்பை அவர் ஏற்பார். அவர் நிறுவனத்தின் பொதுவான நிர்வாகத்திற்கு பொறுப்பு வகிப்பதால் கல்விசார் சிறப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக ரீதியான முகாமைத்துவம் மற்றும் பயன்தரும் மற்றும் பக்கச்சார்பற்ற நிர்வாகத் தலைமை ஆகிய அடிப்படைகளை பின்பற்றுதல் வேண்டும். நிறுவனத்திற்குள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பும் பணிப்பாளர் வசமாகும். அவர் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் பணிக் குழுவின் தேவைகள் தொடர்பில் புரிதல் இருத்தல் வேண்டும் என்பதோடு, நிதி உருவாக்குவதற்கும், பல்கலைக்கழகம் மற்றும் வேறு அது சார்ந்த நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், சர்வதேச தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் முடியுமாக இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் அவரது அறிவுசார் முகாமைத்துவ திறமைகள் மூலம் நிறுவனத்தின் இலக்குகளை எட்டுவதற்கான நோக்கு உள்ள நபர் ஒருவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்/ பெயரிடப்பட்ட நபர் சிறந்த ஆய்வை அறிவித்திருத்தல் வேண்டும் என்பதோடு, உயர் தரமான ஆளிடை திறமையுடன் தலைமைத்துவ பண்புகள் மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பில் தெளிவான புரிதல் உள்ள, கல்வி ரீதியில் உயர்ந்த மற்றும் நேர்மையான ஒருவராக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பணிப்பாளர், நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுவினால் பரிந்துரைக்கப்படும், நூலகம் மற்றும் அறிவியல் தகவல் துறையில் தேர்ச்சியுள்ள மூவரடங்கிய மூலக் குழுவின் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார்.

பணிப்பாளருக்கு பேராசிரியர் ஒருவருக்கு உரித்தான சம்பளம் மற்றும் பதவிக்கு உரிய வேறு கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறும்.

விண்ணப்பம் / முன்மொழிவுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இருத்தல் வேண்டும்:

I) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரரின்/பெயரிடப்பட்டவரின் முழுமையான சுயவிபரக்கோவை (பிறப்புச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்).

II) கல்விசார் மற்றும் ஆராய்ச்சி சிறப்புத்தன்மை, தொழில்முறை தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சி, பயனுள்ள தலைமைத்துவம் போன்றவை சார்ந்த அத்தாட்சிகளின் பிரதிகள்.

III) நிறுவனத்தின் அபிவிருத்தி தொடர்பிலான கொள்கை அறிவிப்பு

IV) பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் எட்டுவதற்கு எதிர்பார்க்கும் இலக்குகள் தொடர்பில் முன்மொழிவுகள் உள்ளடங்கிய சுருக்கமான விபரம்.

V) முன்மொழிவு ஒன்றாயின், அவ்வாறு பெயரிடப்படும் நபரின் விருப்பத்தை உள்ளடக்கிய ஒரு கடிதம்

VI) NILIS நிறுவனம் தவிர, வேறு அரச துறை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான நிறுவனம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்/பெயரிடப்பட்டவர் ஒருவராயின், அவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியுமா என்பதை குறிப்பிட்டு தொழில் வழங்குநரினால் கடிதம்.

நேர்காணலுக்காக அபேட்சகர்கள் தனிப்பட்ட முறையில் அழைக்கப்படுவர். விசேட சந்தர்ப்பம் ஒன்றில், அபேட்சகர் ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் தோன்றுவது முடியாத சந்தர்ப்பத்தில், அவர் வீடியோ மாநாடு அல்லது ஸ்கைப் மூலம் நேர்முகப்பரீட்சைக்கு தோன்றுவதற்கு அனுமதி அளிக்கப்படும். அபேட்சகர் ஒருவர் குறைந்தது பத்து (10) விநாடிகள், ஆனால் பதினைந்து (15) விநாடிகள் மேற்படாது சுருக்கமான நிகழ்ச்சி வழங்கல் ஒன்றுக்காக தயாராகுதல் வேண்டும். நேர்முகப்பரீட்சை 2024 ஜனவரி 01ஆம் திகதிய UGC 01/2024ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 01ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தாளில் உள்ள மூலப்பிரமாணங்களுக்கு அமைய நடைபெறும் என்பதோடு UGC இணையதளத்திற்கு பிரவேசித்து (https://www.ugc.ac.lk) பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு-03 என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில்/ கடித உறை ஒன்றில் அனுப்ப வேண்டும் என்பதோடு 2025 ஜுன் 02ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள அலுவலகத்திற்கு வருகை தந்து ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம்/முன்மொழிவைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘பணிப்பாளர் பதவி’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும். இது தவிர மேல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் PDF வடிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட மென் பிரதி ஒன்றை sar@nilis.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.

**முகாமைத்துவ சபையின் செயலாளர்,**
**தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவனம்,**
**கொழும்புப்பல்கலைக்கழகம்,**
**Web: https//nilis/cmb.ac.lk**
**Tel: 0112259646**
**2025-05-02**